*Chapter XXII Code of Criminal Procedure.)*

*IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.II, ATTUR.*

*Case No.:* ***DVC. 09/2025***

*Deposition of Witness for Prosecuting/Defence/Court* ***PW-1 Cross Continuation***

*Name / Father's Name:* ***திருமதி.ஜெயபாரதி க/பெ. தமிழ்செல்வன்***

*Village/ Taluk:*

*Caste, Religion:*

*Calling, Age:*

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the **10.03.2026.**

**எதிர்மனுதாரர் ஆஜர்.**

துவக்க நேரம் – 12.40 A.N

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

1) எதிர்மனுதாரர் தாக்கல் செய்த விவாகரத்து வழக்கில் நான், இடைக்கால மனு தாக்கல் செய்து அதில் ஒரு இடைக்கால மனுவில் இடைக்கால ஜீவனாம்சமாக மாதம் ரூ.10,000/-மும், வழக்கு செலவுத்தொகையாக ரூ.10,000/- மும் கேட்டு தாக்கல் செய்துள்ளேனா என்றால் ஆமாம்.

2) நான், எதிர்மனுதாரரை திருமணம் செய்த பின்னிட்டு எனது அலுவலகத்திற்கு எதிர்மனுதாரர் அவரது இருசக்கர வாகனத்தில் என்னை அழைத்துச்செல்வாரா என்றால் இல்லை, நான் குடியிருக்கும் வீட்டிற்கும், பேருந்து நிறுத்தத்திற்கும் இடையே 1/2 கி.மீ தூரம் இருக்கும், காலையில் பேருந்து நிறுத்தத்தில் கொண்டுவந்து விட்டுவிட்டு, மாலையில் பேருந்து நிறுத்தத்திலிருந்து என்னை அழைத்துச்செல்வார். அவ்வாறு பேருந்து நிறுத்தத்திலிருந்து என்னை அழைத்துச்செல்ல வருவதற்கு தவறிவிட்டால் எங்களுக்கிடையே வாக்குவாதம் ஏற்படும் என்று சொன்னால் சரியல்ல.

3) எனது அம்மா, அப்பா, எனது சகோதரி ஆகிய மூவரும், எனது கணவரின் வீட்டில் நான் இருந்தபொழுது அடிக்கடி வந்துசெல்வார்கள் என்று சொன்னால் எனது அப்பா, அம்மா ஆகியோர் வருவார்கள், எனது சகோதரி ஒருமுறைதான் வந்து சென்றார். எதிர்மனுதாரருடன், நான் சுமூகமான உறவுமுறையில் இருந்தபொழுது எனது அக்கா மாமனார் பச்சமுத்துவிற்கு, எனது கணவரிடமிருந்து ரூ.1 இலட்சம் வாங்கி கொடுத்தேன்

என்று சொன்னால் சரியல்ல, நான் வாங்கி கொடுக்கவில்லை, நீங்கள் கொடுத்திருந்தால் நீங்களே அவரிடம் கேட்டு வாங்கிக்கொள்ளுங்கள் என்று எனது கணவரிடம் சொல்லியுள்ளேன். அதேபோல் பிரகாஷ் என்பவருக்கு நான் ரூ.15,000/– வாங்கிக்கொடுத்தேன் என்று சொன்னால் சரியல்ல. எனது தாயார் வள்ளிக்கு, நான் எனது கணவரிடமிருந்து ரூ.20,000/– வாங்கிக்கொடுத்தேன் என்று சொன்னால் சரியல்ல.

4) எதிர்மனுதாரர், எனக்கெதிராக விவாகரத்து வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு, எத்தனை முறை நான், எனது பெற்றோர் வீட்டிற்கு சென்றேன் என்றாலும், எதிர்மனுதாரர் எத்தனை முறை சமரசம் பேசி என்னை அவரது வீட்டிற்கு அழைத்துச்சென்றார் என்றால் ஒருமுறைதான் நான் எனது பெற்றோர் வீட்டிற்கு சென்றேன், அதுவும் எனக்கும், எதிர்மனுதாரருக்கும் எவ்வித சண்டை, சச்சரவும் இல்லை, எதிர்மனுதாரரின் தாயார் என்னை தனியாக சாப்பாடு செய்யச்சொல்லி சொன்னதால் எனக்கும், எதிர்மனுதாரரின் தாயாருக்கும் சண்டை ஏற்பட்டு நான் எனது பெற்றோர் வீட்டிற்கு சென்றேன்.

5) சமூக நல அலுவலகத்தில் நான் கொடுத்த மனுவிற்கு எத்தனை முறை விசாரணைக்கு சென்றேன் என்றால் மூன்று முறை சென்றேன். சமூக நல அலுவலரின் விசாரணையின்போது நான் கடந்த 12.06.2024 ம் தேதி கொடுத்த எழுத்து மூலமான வாக்குமூலத்தில், "எனது கணவர், என்னை நான் கருப்பாக இருப்பதாகவும் , அழகாக இல்லை என்றும் என்னிடம் பேச மறுக்கிறார், இதை பற்றி கேட்டால் என்னை மிரட்டுகிறார், அதனால் நான் அவருடைய மிரட்டலுக்கு பயந்து கட்டிய துணியோடு எனது வீட்டிற்கு சென்றேன் " என்று சொல்லியுள்ளேன் என்று சொன்னால் சரிதான்.

6) நான், எனது மாமியாருடன் சண்டையிட்டு எனது பெற்றோர் வீட்டிற்கு சென்ற பிறகு நானே, எனது கணவரின் வீட்டிற்கு வந்தேனா அல்லது பைசல் பேசப்பட்டு அழைத்துவரப்பட்டேனா என்றால் நானேதான் வந்தேன், கடந்த பிப்ரவரி மாதம் வந்தேன், ஆனால் அது 11.02.2024 அல்லது 12.02.2024 என்று நியாபகம் இல்லை.

7) அதன்பின்னிட்டு மீண்டும் ஒருவாரம் கழித்து எனது பெற்றோர் வீட்டிற்கு சென்றுவிட்டேனா என்றால் டைம் சரியில்லை என்று எனது கணவர் கூறினார், மேலும் எனது அம்மா வீட்டில் ஒரு மாதம் இரு, நான், உன்னை திரும்ப அழைத்து செல்கிறேன் என்று சொன்னதன் பேரில் நான், எனது அம்மா வீட்டிற்கு

சென்றுவிட்டேன். அவ்வாறு நான் ஒருமாதம் எனது அம்மா வீட்டில் இருந்தபொழுது, எதிர்மனுதாரர், எனக்கெதிராக விவாகரத்து வழக்கு தாக்கல் செய்து, அதில் எனக்கு நோட்டீஸ் அனுப்பப்பட்டது என்று சொன்னால் சரிதான். நோட்டீசை பெற்றுக்கொண்ட நான் கடந்த 01.04.2024 ல் எதிர்மனுதாரரின் வீட்டிற்கு சென்றேன் என்றால் ஆமாம், ஆனால் மார்ச் 26.03.2024 அன்று எதிர்மனுதாரரின் வீட்டிற்கு சென்றேன், என்னை வீட்டிற்குள்ளே அனுமதிக்கவில்லை, நான்கு நாட்கள் வீட்டில் வெளியிலேயே இருந்துவிட்டு, ஐந்தாவது நாளான 01.04.2024 அன்று எதிர்மனுதாரருடைய வீட்டின் பூட்டை உடைத்து உள்ளே சென்றேன். அன்றுமுதல் இன்றுவரை நான், எதிர்மனுதாரரின் வீட்டில்தான் இருக்கிறேன் என்று சொன்னால் ஆமாம்.

8) எதிர்மனுதாரர்தான், நான் வேலைக்கு செல்லும்பொழுது என் அலுவலகத்திற்கு அவரது இருசக்கர வாகனத்தில் அழைத்துச்சென்றுவந்த நிலையில் ஒருசில நாட்களில் என்னை, எனது அலுவலகத்திற்கு அழைத்துச்செல்ல வரத்தவறிவிட்டால் அவரை பலவிதங்களில் திட்டி கொடுமைபடுத்தினேன் என்று சொன்னால் சரியல்ல.

9) கடந்த 28.12.2023 அன்று எனது கணவர், என்னை திட்டாமல் நானே, எனது கணவருடன் சண்டைசெய்து, எனது கணவரை திட்டிவிட்டு, நானாகவே வீட்டை விட்டு சென்றுவிட்டேன் என்று சொன்னால் சரியல்ல, எங்களுக்கு நிறைய வசதி உள்ளது, 50 பவுன் போட்டு பெண் கொடுக்க தயாராக இருந்தார்கள், நாங்கள்தான் வசதியில்லாத உங்கவீட்டிலிருந்து பெண் எடுத்துவிட்டோம் என்று பலமுறை சொல்லி எதிர்மனுதாரரின் தாயார் என்னிடம் சண்டை போட்டதால் நான் வீட்டைவிட்டு வெளியேறினேன். 28.12.2023 ம் தேதிக்கு முன்பே இரண்டுமுறை நான், எதிர்மனுதாரருடன் சண்டை போட்டுக்கொண்டு எனது பெற்றோர் வீட்டிற்கு சென்றுவிட்டேன் என்று சொன்னால் சரியல்ல.

10) கடந்த 12.02.2024 ம் தேதி 11.00 மணிக்கு நானும், எனது தாயார் வள்ளி, பச்சமுத்து, செல்லதுரை, பிரகாஷ் மற்றும் 20 அடியாட்களுடன், எதிர்மனுதாரரின் தோட்டத்திற்கு வந்து அதில் பிரகாஷ், ராமச்சந்திரன் ஆகியோர்கள், எதிர்மனுதாரரின் கைகளை பிடித்துக்கொள்ள காசி என்பவர், எதிர்மனுதாரரின் கன்னத்தில் கையால் ஓங்கி அடித்தார் என்றாலும், மேலும் எதிர்மனுதாரரை கழுத்தை நெறித்து கொலைவெறி தாக்குதல் நடத்தினார்கள் என்றாலும், எதிர்மனுதாரர் அவரது உயிருக்கு பயந்து அங்கிருந்து தலைவாசல் காவல் நிலையத்திற்கு ஓடினார் என்றாலும், நாங்கள்

அழைத்துவந்த ஆட்கள் அனைவரும், எதிர்மனுதாரரை தலைவாசல் காவல் நிலையத்திற்கு உள்ளே செல்லவிடாமல் தடுத்தார்கள் என்றாலும், அதனால் எதிர்மனுதாரர் அங்கிருந்து தப்பித்து சேலத்திற்கு சென்றுவிட்டார் என்று சொன்னாலும் அதேபோல் எதிர்மனுதாரரின் தாயார் பச்சியம்மாளின் கழுத்தை பிடித்து நெறித்து அவரது கழுத்தில் அணிந்திருந்த 3 பவுன் சங்கிலியை பறித்துக்கொண்டார்கள் என்று சொன்னாலும், அதனால் பச்சியம்மாளிற்கு ரத்தம் வந்து அதன் பேரில் தலைவாசல் காவல் நிலையத்தில் புகார் கொடுக்க செல்லவிடாமல் அவரை தடுத்ததால் அவர் சேலம் மாவட்ட காவல் துணை கண்காணிப்பாளரிடம் கொடுத்த புகாரின் பேரில் மேற்படி புகார் தலைவாசல் காவல் நிலையத்திற்கு மாற்றப்பட்டு அந்த புகாரின் பேரில் எங்களை அழைத்துவிசாரித்தார்கள் என்று சொன்னால் சரிதான், மேற்படி புகாரின் நடத்திய விசாரணையில் நாங்கள் எதிர்மனுதாரரையோ, எதிர்மனுதாரரின் தாயாரையோ தாக்கவில்லை, மேலும் எதிர்மனுதாரர், என்னை ஒருமாதம் கழித்து அவரது வீட்டிற்கு அழைத்துச்செல்வதாக கூறியதன் பேரில் மேற்படி புகாரானது முடிக்கப்பட்டது.

11) மேற்படி புகாரின் மேல் நடத்திய விசாரணைக்கு ஆஜராக நாங்கள் 20 நபர்கள் சென்றோமா என்றால் இல்லை. தலைவாசல் காவல் நிலையத்தில் கொடுத்த புகாரின் பேரில் நடத்திய விசாரணைக்கு பாட்டாளி மக்கள் கட்சியை சேர்ந்த கிழக்கு மாவட்ட தலைவர் மற்றும் 20 நபர்கள் வந்ததால் தலைவாசல் காவல் நிலையத்தில் சரிவர விசாரணை நடைபெறாததால் மீண்டும் எதிர்மனுதாரரின் தாயார் சேலம் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அவர்களிடம் ஒரு புகார் கொடுத்திருந்தாரா என்றால் ஆமாம், அந்த புகாரானது ஆத்தூர், துணை காவல் கண்காணிப்பாளர் அவர்களுக்கு மாறுதல் செய்யப்பட்டு, அங்கு விசாரணை நடைபெற்றதா என்றால் ஆமாம். அந்த விசாரணைக்கும் நான் 30 நபர்களுடன் விசாரணைக்கு சென்றதால் என்னால் இந்த புகாரை விசாரிக்க முடியாது என்று ஆத்தூர், காவல் துணை கண்காணிப்பாளர் அவர்கள் தெரிவித்துவிட்டார்கள் என்றால் ஒருமுறை எதிர்மனுதாரர் விசாரணைக்கு ஆஜரானார், 10 நாட்கள் கழித்து விசாரணை ஒத்திவைக்கப்பட்ட நிலையில் எதிர்மனுதாரர் மீண்டும் விசாரணைக்கு ஆஜராகவில்லை. இதற்கு பின்னிட்டுதான் எதிர்மனுதாரர் விவாகரத்து வழக்கினை தாக்கல் செய்தாரா என்றால் இல்லை, காவல் நிலையத்திற்கு விசாரணைக்கு ஆஜராகி ஒருமாதம் கழித்து என்னை அழைத்துச்செல்வதாக கூறிவிட்டு அந்த ஒருமாத கால இடைவெளியில் எனக்கெதிராக விவாகரத்து வழக்கு தாக்கல் செய்தார்.

12) எதிர்மனுதாரர், நான் அவரது வீட்டின் பூட்டை உடைத்து உள்ளே நுழைந்தது சம்மந்தமாக கடந்த 12.04.2024 ம் தேதி ஒரு புகார் கொடுத்து அது ஆத்தூர் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் விசாரிக்கப்பட்டதா என்றால் ஆமாம். அங்கேயும் நான் 20, 30 நபர்களுடன் விசாரணைக்கு சென்றதால் என்னால் இந்த புகாரை விசாரிக்க முடியாது என்று ஆத்தூர், அனைத்து மகளிர் காவல் நிலையத்திலும் தெரிவித்துவிட்டார்கள் என்றால் இல்லை, எதிர்மனுதாரர் மேற்படி புகாரின் விசாரணை நடைபெற்றுக்கொண்டிருந்தபொழுது காவல் நிலையத்திலிருந்து வெளியே சென்றுவிட்டார்கள்.

13) நான், எதிர்மனுதாரரின் வீட்டில் இருந்து எதிர்மனுதாரரின் தாயாரின் 17–1/2 பவுன் நகைகளை எடுத்துக்கொண்டதாகவும், பணம் ரூ.4,25,000/–ஐ எடுத்துக்கொண்டதாகவும் மற்றும் காட்டுப்பத்திரங்களின் அசலை எடுத்துக்கொண்டதாகவும் சொல்லி கடந்த 15.04.2024 அன்று எதிர்மனுதாரர், தலைவாசல் காவல் நிலையத்தில் புகார் கொடுத்திருந்தாரா என்றால் ஆமாம், ஆனால் 2023 ம் வருடம், டிசம்பர் மாதம் எதிர்மனுதாரரின் வீட்டைவிட்டு வெளியேறி, ஏப்ரல் 1 ம் தேதிதான் எதிர்மனுதாரரின் வீட்டின் பூட்டை உடைத்து உள்ளே வந்தேன், மேலும் எதிர்மனுதாரரின் தாயார், டைவர்ஸ் நோட்டீஸ் கொடுத்துவிட்டோம், அதனால் உன் அம்மா வீட்டில் இரு என்று சொன்னார்கள்.

14) புகார் கொடுத்த அன்று நான், பச்சமுத்து மற்றும் 20 நபர்கள் தலைவாசல் காவல் நிலையத்திற்கு விசாரணைக்கு வந்ததன் பேரில் தலைவாசல் காவல் ஆய்வாளர், புகார் மனு ஏற்புச்சான்றிதழ் கொடுத்து விசாரணை மேற்கொண்டாரா என்றால் ஆமாம். வீட்டிற்கும் வந்து பார்த்தார்களா என்றால் ஆமாம்.

15) நான், எனது அம்மா வள்ளி, எனது அப்பா செல்லக்கண்ணு மற்றும் உறவினர்கள் அனைவரும் எதிர்மனுதாரரின் சொத்தை எனது பெயரில் எழுதிவைக்கவேண்டும் என்று எதிர்மனுதாரரை அடித்து கொடுமைபடுத்தினோம் என்று சொன்னால் சரியல்ல, நான் சொத்தை எழுதிகேட்கவில்லை, என் மாமியார்தான் நானும், எனது கணவரும் ஒன்றாக இருந்தபொழுதே இரண்டு ஏக்கர் காடும், 1 இலட்ச ரூபாய் பணமும், வருடத்திற்கு 5 மூட்டை நெல்லும் மற்றும் குடியிருக்க வீடும் எழுதிவைக்கவேண்டும் என்று சொல்லிவிட்டு எனது மாமியார், அவரது இளைய மகளின் வீட்டிற்கு சென்றுவிட்டார், பின்பு 16 நாட்கள் கழித்து Online–ல் நான், எனது மாமியாருக்கு கொலைமிரட்டல் விடுத்ததாக சொல்லி complaint கொடுத்துவிட்டு நேராக

தலைவாசல் காவல் நிலையத்திற்கு வந்துவிட்டு, பின்பு எங்களது வீட்டிற்கு வந்தார். மேற்படி விவரத்தை நான், எனது DVC வழக்கில் சொல்லவில்லை என்று சொன்னால் சரியல்ல, சொல்லியுள்ளேன்.

16) நான், எதிர்மனுதாரருடைய தாயாரின் நகையை திருடிவிட்டதாக புகார் கொடுத்ததன் பின்னிட்டு எதிர்மனுதாரரின் பெயரில் இருந்த விவசாய நிலத்தில் பயிரிடப்பட்டிருந்த மக்காச்சோளம், மஞ்சள் செடி, சொட்டுநீர் பாசனத்திற்கு அமைக்கப்பட்டிருந்த பைப்புகள் முதலியவற்றை கொளுத்திவிட்டேன் என்று சொன்னால் இல்லை, மஞ்சளை மட்டும் ஆள்வைத்து வெட்டி கொட்டிவைத்திருந்தேன்.

17) நான், விவசாய நிலத்தில் பயிரிடப்பட்டிருந்த பயிர்களை கொளுத்தியதற்கான புகைப்படம் இதுவா என்றால் இல்லை, இது மக்காச்சோளம் அறுவடை செய்யப்பட்டு, பின்பு மக்காச்சோளத்தட்டையை எதிர்மனுதாரரே கொளுத்திவிட்ட புகைப்படம்தான் அந்த புகைப்படம். எதிர்மனுதாரரின் காட்டை, நான் கொளுத்தியது சம்மந்தமாக எதிர்மனுதாரர் கடந்த 26.04.2024 அன்று சேலம் மாவட்ட காவல் துறை கண்காணிப்பாளர் அவர்களிடம் புகார் கொடுத்து, அந்த புகாரை ஆத்தூர் காவல் துறை துணை கண்காணிப்பாளரும், தலைவாசல் காவல் நிலைய ஆய்வாளரும் விசாரித்தால் சரிவராது என்பதற்காக வாழப்பாடி காவல் துறையினரால் விசாரிக்கச்சொல்லி மேற்படி புகாரானது அனுப்பிவைக்கப்பட்டதா என்றால் ஆமாம், அந்த புகாரை எனது நாத்தனார் கொடுத்திருந்தார்.

18) மேற்படி புகாரின் பேரில் வாழப்பாடி, காவல் துணை கண்காணிப்பாளர் எங்களை விசாரணைக்கு அழைத்தபொழுது யார் யார் அங்கு சென்றோம் என்றால் நானும், எனது அம்மா, பிரகாஷ் மற்றும் காசி ஆகியோர்கள் சென்றிருந்தோம். வாழப்பாடி, காவல் துணை கண்காணிப்பாளர் எங்கள் இருதரப்பினரையும் விசாரித்தாரா என்றால் ஆமாம். மேற்படி விசாரணையில், என்ன முடிவு செய்யப்பட்டது என்றால் காவல் துணை கண்காணிப்பாளர் சொத்துக்காக ஏன் இப்படி அடித்துக்கொள்கிறீர்கள் என்று கேட்டு மேற்படி விசாரணையின் முடிவில் நான் மஞ்சள் வெட்டுவதற்கு செலவிடப்பட்டு கூலித்தொகையை கொடுத்துவிட்டு மஞ்சளை எடுத்துக்கொள்ளுங்கள் என்று விசாரணையின் முடிவில் நான் எழுதிக்கொடுத்துவிட்டு வந்தேன், மேலும் காவல் துணை கண்காணிப்பாளர் அவர்கள் சொத்துக்கா ஏன் இப்படி அடித்துக்கொள்கிறீர்கள் என்று எங்களிடம் கேட்கவில்லை.

19) மறுநாள் மஞ்சளை அள்ள வந்தார்களா என்றால் வந்தார்கள், எனது சின்ன நாத்தனார், எனது கணவர், எனது மாமியார், எனது மாமியாரின் தயார் மற்றும் 10 நபர்கள் வண்டியுடன் மஞ்சளை அள்ள வந்திருந்தார்கள். எனக்கு மஞ்சளை வெட்டுவதற்கு ஏற்பட்ட செலவை மேற்படி நபர்கள் கொடுக்கவில்லை என்பதால் நான், அவர்களை மஞ்சளை அள்ள விடவில்லை, அப்பொழுதுதான் என்னை, எதிர்மனுதாரர், எதிர்மனுதாரரின் தாயார் மற்றும் எனது சின்னநாத்தனார் ஆகியோர் அடித்தால் நான், ஆத்தூர் அரசு மருத்துவமனையில் உள்நோயாளியாக சிகிச்சைக்கு சேர்ந்தேன்.

20) நானும், எனது ஆட்களும், எதிர்மனுதாரரையும், எதிர்மனுதாரரின் சகோதரி சுசீலாவையும் அடித்துவிட்டதாக சொல்லி மேற்படி நபர்கள் ஆத்தூர், அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்ந்திருந்தார்களா என்றால் ஆமாம், ஆனால் நான் மட்டும்தான் வீட்டில் இருந்தேன், அடியாட்கள் யாரும் அங்கு இல்லை. மேற்படி புகார் சம்மந்தமாக பலமுறை நான், தலைவாசல் காவல் நிலையத்திற்கு சென்றிருந்தேன், எதிர்மனுதாரருக்கும், அவரது சகோதரிக்கும் தலைவாசல் காவல் நிலையத்திலிருந்து பலமுறை விசாரணைக்கு ஆஜராக சொல்லி தொலைபேசியில் அழைத்தார்கள், ஆனால் அவர்கள் அழைப்பை ஏற்கவில்லை.

21) ஆத்தூர், அரசு மருத்துவமனையில் எதிர்மனுதாரரும், அவரது சகோதரியும் உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்தபொழுதே நானும், எனது அடியாட்களும் மருத்துவமனைக்கு சென்று மிரட்டினோம் என்று சொன்னால் சரியல்ல, ஆத்தூர், அரசு மருத்துவமனையில் CCTV கேமரா உள்ளது, அதை பார்த்தால் தெரியும், நானோ அல்லது என்னை சார்ந்தவர்களோ அவ்வாறு மிரட்டவில்லை.

22) கடந்த 04.10.2024 அன்று எதிர்மனுதாரர் விவாகரத்து வழக்கிற்காக நீதிமன்றத்தில் ஆஜரானபொழுது நீதிமன்றத்தின் வளாகத்திற்குள்ளேயே நாங்கள் அவரை மிரட்டினோம் என்று சொன்னால் அவ்வாறு எதுவும் நடக்கவில்லை, எதிர்மனுதாரர் காரில் எனது நாத்தனாருடன் வருகிறார், மீண்டும் எங்களது வீட்டிற்கு வருவதில்லை என்பதால் நீங்கள் போகும் இடத்திற்கு என்னையும் அழைத்துச்செல்லுங்கள் இல்லையேல் நம்வீட்டிற்கு வாருங்கள் என்றுதான் சொன்னேன். நான் காரை வழிமறித்தேன் என்று சொன்னால் சரியல்ல, நான், எதிர்மனுதாரருடன் செல்வதற்காக காரில் ஏற முயற்சித்தபொழுது என்னை நீதிமன்ற வாயில் அருகே என்னை பிடித்து வெளியே தள்ளிவிட்டு அவர்கள் சென்றுவிட்டார்கள்.

23) மேற்படி சம்பவம் தொடர்பாக எதிர்மனுதாரரின் வழக்கறிஞர் கொடுத்த புகாரின் பேரில், ஆத்தூர் நகர காவல் நிலையத்திலிருந்து என்னை அழைத்து விசாரித்தார்களா என்றால் இல்லை. மீண்டும் 30.01.2025 அன்று எதிர்மனுதாரர் சார்பு நீதிமன்றத்திற்கு விசாரணைக்கு ஆஜரான பொழுது, நீதிமன்ற வளாகத்தின் உள்ளேயே எதிர்மனுதாரரை மறித்து கொலைமிரட்டல் விடுத்தேன் என்று சொன்னால் சரியல்ல. இது சம்மந்தமாக எதிர்மனுதாரர் நீதிமன்றத்தில் தெரிவித்ததற்கு போலிசில் புகார் கொடுக்கச்சொல்லி அறிவுறுத்தியதன் பேரில் நீதிமன்ற பாதுகாப்பிற்காக இருந்த காவலரிடம் சொல்லி அவர்கள் ஆத்தூர், நகர காவல் நிலையத்திற்கு தகவல் தெரிவித்து அவர்கள் வந்து, என்னை சமாதானப்படுத்தி சென்றார்களா என்றால் இல்லை, நான், எதிர்மனுதாரரிடம் என்னை, அவருடன் அழைத்துச்செல்லுமாறுதான் கூறினேன், அதற்கு எதிர்மனுதாரர், அவரை நான் மிரட்டியதாக சொல்லி புகார் கொடுத்தார்.

24) கடந்த 15.02.2025 அன்று நானும், எனது அம்மா வள்ளியும் சேர்ந்து காலை 08.30 மணியளவில் எதிர்மனுதாரரின் தாயார் பச்சியம்மாளையும், அவரது தாயார் குப்பாயியையும் அடித்து வீட்டைவிட்டு துறத்திவிட்டேன் என்று சொன்னால் சரியல்ல, அன்றைய தேதியில் CCTV கேமரா செயல்பாட்டில் உள்ளது, அதை வேண்டுமானால் பார்த்து தெரிந்துகொள்ளுங்கள். அப்பொழுது மேற்படி நபர்கள், 108 ஆம்புலன்சு மூலம் ஆத்தூர், அரசு மருத்துவமனைக்கு வந்து சிகிச்சைக்கு சேர்ந்தார்களா என்றால் ஆமாம். அவர்கள் மருத்துவமனையில் இருந்தபொழுது, நான் சென்று அவர்களை மிரட்டினேனா என்றால் இல்லை, நான் அரசு மருத்துவமனைக்கு சென்று பார்த்தேன், நான் யாரையும் மிரட்டவில்லை. நான் அங்கு சென்று மிரட்டியதால்தான் அவர்கள் ஆத்தூர் அரசு மருத்துவமனையிலிருந்து வெளியேறி, சேலம் அரசு மருத்துவமனைக்கு சென்று சிகிச்சைக்கு சேர்ந்தார்களா என்றால் இல்லை. அவ்வாறு சேலம் அரசு மருத்துவமனையில் இருந்தபொழுது புகார் வாக்குமூலம் பதிவு செய்து, தலைவாசல் காவல் நிலைய புகார் மனு ஏற்புச்சான்று 201/2025 கொடுக்கப்பட்டு என்னை விசாரணை செய்தார்களா என்றால் இல்லை. மேற்படி புகாரின் பேரில், எங்களையும், சாட்சிகளையும் அழைத்து விசாரித்ததில் சொத்திற்காகத்தான் நாங்கள் இவ்வாறு தகராறு செய்கிறோம் என்று முடிவு செய்த நிலையில், எங்களுக்கு இருக்கும் செல்வாக்கை பயன்படுத்தி வழக்கை போடவிடாமல் தடுத்துவிட்டோம் என்று சொன்னால் சரியல்ல.

25) மேற்படி புகாரின் பேரில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யாததால் பச்சியம்மாள், இந்நீதிமன்றத்தில் தனிப்புகார் தாக்கல் செய்து நிலுவையில் இருந்து வருகிறது என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. கடந்த 23.04.2025ம் தேதி எதிர்மனுதாரர் தேவியாக்குறிச்சி ரேசன் கடையில் பொருள் வாங்கவில்லை என்றால் கார்டை ரத்துசெய்வதாக சொன்னதால் எதிர்மனுதாரர், தேவியாக்குறிச்சி நியாயவிலைக்கடைக்கு பொருள் வாங்க சென்றிருந்த நிலையில் நான் அடியாட்களுடன் அங்கு சென்று எதிர்மனுதாரர் மீது மிளகாய்த்தூளை தூவி அடித்து, கொலைசெய்ய முயற்சிசெய்தேன் என்று சொன்னால் சரியல்ல, நான் எதேச்சியாக அங்கு சென்றபொழுது எதிர்மனுதாரர் இருந்தார், நான் அவரிடம் பேச முயற்சித்தேன், அப்பொழுது எதிர்மனுதாரர் என்னை ஹெல்மெட்டால் தாக்கிவிட்டு அங்கிருந்து சென்றுவிட்டார். மேற்கண்டவாறு நானும், அடியாட்களும் அடித்தது சம்மந்தமாக எதிர்மனுதாரர் சேலம் அரசு மருத்துவமனையில் உள்நோயாளியாக சிகிச்சைக்கு சேர்ந்து மேற்கண்டவாறு சிகிச்சையில் இருந்தபொழுது தலைவாசல் காவல் நிலையத்தார் புகார் வாக்குமூலம் பதிவு செய்து தலைவாசல் காவல் நிலைய புகார் மனு ஏற்புச்சான்றிதழ் 414/2025 வழங்கப்பட்டதா என்றால் இல்லை, நான், எதிர்மனுதாரரை அடிக்கவில்லை, எதிர்மனுதாரர் அன்று மாலை 05.00 மணியளவில் நான் குடியிருந்த வீட்டிற்கு வந்து எனது பாதுகாப்பிற்காக போடப்பட்டிருந்த CCTV கேமரா மற்றும் மெயின்டோர், கிச்சன் டோர், பெட்ரூம் டோர் மற்றும் தண்ணீர் பைப் மற்றும் கிணற்றில் வைத்திருந்த மோட்டாருக்கு வரும் ஒயர்களை அறுத்து மோட்டார் மற்றும் ஒயர்களை கிணற்றுக்குள் வீசிவிட்டு சென்றுவிட்டார்கள், அவ்வாறு எதிர்மனுதாரர் செய்ததற்கான CCTV பதிவு என்னிடம் உள்ளது, தேவைப்படும் பட்சத்தில் தாக்கல் செய்கிறேன்.

**எதிர்மனுதாரர் தரப்பு வேண்டுகோளிற்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது.**

முடிவு நேரம் 02.10 A.N

C UDAYASUNDARAM

Digitally signed by C UDAYASUNDARAM
Date: 2026.03.10 23:02:15 +0530

Judicial Magistrate No.2, Attur.